**களவான பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களவான பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் களவான பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும்

அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 1,146,520 இனை மூலதனமாக்கி இருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டிருந்த செலவை மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை மேம்படுத்தல் கிரயத்தை மூலதனமாக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 5,688,251 ஆன முத்திரை கட்டண மிகை ஒதுக்கீடு மற்றும் ரூபா 8,099,708 ஆன நீதிமன்ற தண்டப்பண குறை ஒதுக்கீட்டிற்காக செம்மையாக்கல் செய்யாததன் காரணமாக மற்றும் 2019 ஆண்டின் அறிக்கை மூலம் சுட்டிக் காட்டிய கிடைக்க வேண்டிய முத்திரை | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக | முத்திரை கட்டண மிகை ஒதுக்கீடு மற்றும் நீதிமன்ற தண்டப்பண குறை ஒதுக்கீட்டினை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் குறை பில்லிடல் ரூபா 234,455 கூடுதலாக செம்மையாக்கியதன் காரணமாக குறித்த கணக்குகள் குறைவாக மற்றும் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | | |
| (இ) | மீளாய்வாண்டு கொரோனா தொற்று காரணமாக அறவிட முடியாத வருமான கூட்டுத் தொகை ரூபா 1,727,869 இனை திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கிய காரணத்தால் ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை அப் பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | உண்மையாகவே அறவிட முடியாத வருமானமொன்றாக காட்டப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கியதாக. | மீளாய்வாண்டினுள் அறவிட முடியாத வருமானத்தை திரண்ட நிதியத்தினூடாக செம்மையாக்கல் செய்யக் கூடாது. |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் பதிவழிக்க அங்கீகரித்திருந்த ரூபா 249,002 ஆன கடன் கொடுனரிற்காக செம்மையாக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | கைத்தவறு எனவும் எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்று தயாரிக்கும் போது சரி செய்வதாக. | ஆண்டினுள் பதிவழிக்கப்பட்ட கடன் கொடுனர் பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய சம்பள மீள்நிரப்பு பில்லிடல் ரூபா 267,486 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பரிசோதித்து பார்த்து எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்கு உரிய பில்லிடலை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 132 (ஓ) பிரிவு | புனித அல்லது நலன்புரி நிறுவனங்களிற்கு உதவி செய்கையில் ஓராண்டிற்கான மொத்த தொகை ரூபா 1,000 இனை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சரின் ஆவணமொன்றுடனான முன்கூட்டிய அனுமதி பெறப்பட வேண்டிய போதும். அவ்வாறு செயற்படாது 2020 ஆண்டினுள் அதிகார எல்லையில் | எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்வனவுகளிற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

காணப்படும் சங்கங்களிற்காக குழாய்கள் தேவைப்பாடு தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ளாது குழாய்களை விநியோகித்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக ஆண்டினுள் 03 செலவு விடயங்களின் கீழ் கூட்டுத் தொகை ரூபா 2,698,200 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 5,797,765 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 38,918,876 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,187,279 ஆன நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வீதவரி மற்றும் ஏக்கர் வரி பெறுமதி நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மற்றும் துணை அறிக்கைகள் பிரகாரம் முறையே ரூபா 11,182,195 மற்றும் ரூபா 417,021 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | ஆதனத்தடை செய்யும் வேலைத் திட்டத்தை நடாத்த திட்டமிட்ட போதும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமா அவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை எனினும் இவ் வீதவரி உரிமையாளர்களிற்கு எழுத்து மூலம் அறிவித்து மற்றும் ஒலிபெறுக்கி இயந்திரம் ஊடான அறிவூட்டல் மேற்கொண்டதாகவும் கணக்கு மீதிகள் பரிசோதித்து சரிசெய்வதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே பேரேட்டுக் கணக்கு மற்றும் துணை ஏடுகள் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் ரூபா 226,164 ஆன நிலுவை ஏக்கரி வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| (i) | தேவையான வசதிகளை வழங்காததன் காரணமாக புதிய பேரூந்து தரிப்பிட 20 | இக் கடையறைகளிற்கு மின்சார வசதியை பெற்றுக் கொடுத்து ஒப்படைத்து, கடை வாடகை | குத்தகை சொத்துக்களை குத்தகை ஒப்பந்தம் |

| | | | |
|---|---|---|---|
| | கடையறைகளை வாடகை ஒப்பந்தம் மூலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. புதிய பேருந்து தரிப்பிட 20 கடையறைகளிற்கு உரிய ரூபா 808,500 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் 2020 பாதீட்டின் 5/22 (கடை வாடகை) தலைப்பின் கீழ் காட்டப்பட்டிருந்ததாக மேலும் அவதானிக்கப்பட்டது. | கட்டணத்தை எதிர்காலத்தில அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | மூலம் ஒப்படைத்து கிடைக்க வேண்டிய வாடகை வருமானத்தை அறவிட நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | அமைச்சரின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய கடை வாடகை, வாராந்த சந்தை, இறைச்சிக்கடை, மீன்கடை வாடகை கூட்டுத் தொகை ரூபா 1,727,869 கொரோனா தொற்று காரணமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | அறவிட முடியாத கட்டணத்தை பதிவழித்ததாக மற்றும் அத் தீர்மானத்தை ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்பித்துள்ளதாக. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் பதிவழிக்க வேண்டும். |

(இ) ஏனைய வருமானங்கள்

| | | |
|---|---|---|
| 2020 ஜனவரி மேற்கொண்ட அறிவித்தல் பலகை கணிப்பீட்டின் மூலம் இனங்கண்ட 04 நிலையான அறிவித்தல் பலகைகளிற்காக அறவிட வேண்டிய ரூபா 86,750 ஆன தொகையை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய பணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடடிவக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரத்தெல்ல வெலிகும்புர பாதை 5/1 கொண்ட பாளத்தை நிர்மாணத்திற்கு பிரதேச சபையுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 2013 ஆண்டில் இணங்கி அந்நிர்மாண ஒப்பந்தத்தின் நிதி மற்றும் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஈடுபட்டு செயற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்தல் | இக் கருத்திட்டம் பின்னடைந்த உள்ளூராட்சி நிறுவனங்களை தெரிவு செய்து அவற்றை முன்னேற்றும் நோக்கில் தீவு முழுவதும் ஒரே முறைமையின் பிரகாரம் செயற்படுத்திய கருத்திட்டமாகையால் பிரச்சினைக்குரிய சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய முறை பற்றி இணக்கப்பாட்டிற்கு வர சபைக்கு இயலுமை இல்லையென. | உடன்படிக்கை செய்கையில் ஒப்பந்ததாரரிற்கு உரிய அனைத்து விடயங்களும் உள்ளடங்கும் வகையில் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடல் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் ஒப்பந்தத்தின் பிரச்சினைக்குரிய சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய முறை பற்றி பிரதேச சபை பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்காததுடன், நிர்மாண ஒப்பந்தத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தலையிடுவதாக ஒப்பந்ததாரருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் குறிப்பிட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்திற்கு கொடுப்பனவு செய்கையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பொறியியலாளரின் பரிந்துரையின் மீது ஒப்பந்ததாரரிற்கு கொடுப்பனவு செய்யாத ரூபா 5,654,599 உம், 2014 ஜுன் 14 திகதி முதல் அதற்குரிய வட்டியையும், தீர்வுக் கட்டணத்தையும் கோரி ஒப்பந்ததார் சபைக்கு எதிராக தீர்வு நடவடிக்கை ஒன்றிற்கு முன்வந்திருந்தார். மீளாய்வாண்டு இறுதி வரையும் சபை நிதியத்தினால் சட்ட கட்டணமாக ரூபா 555,394 ஆன தொகையொன்றை செலவிடப்பாட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் பிரதேச சபை எதிர்பாரா பொறுப்புக்கும் உட்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பனாபொல அம்பகஹகந்த பென்டேக் நீர் மின் உற்பத்தி நிலையத்தை மெகா வொட் 2.4 கொள்ளளவுடன் நிர்மாணிக்க அங்கீகாரம் வழங்கியிருந்த போதும், குறித்த செயற்பாட்டு நிறுவனம் மெகா வொட் 4.2 கொள்ளளவுடன் மின் உற்பத்தி செய்வதாக இலங்கை மின்சார சபையூடாக உருதி செய்யப்பட்டிந்தது. இக் கருத்திட்டதினூடாக சுற்றாடலிற்கு ஏற்பாடும் பாதிப்பு தொடர்பாக பிரதேச வாசிகள் மற்றும் சிங்ஹராஜ நேசர்கள் அமைப்பினால் சபையை அறிவூட்டிய போதும், கொள்ளளவை மீறி செயற்படல் மற்றும் அதனூடாக ஏற்படும் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக கண்டறிந்து அதன் பிரகாரம் செயற்பட சபையிற்கு இயலாதிருந்தது. | உற்பத்தி நிலையத்திற்கு வழங்கியுள்ள நிர்மாண அனுமதியை இரத்துச் செய்வதாகவும் இவ் உற்பத்தி நிலைய செயற்பாடுகளை உடனடியாக நிருத்தும் படியும் அவ்வாறு செய்யாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும். | கொள்ளளவை மீறி செயற்படுவது தொடர்பில் நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கொஸ்குலன சிறிய அளவிலான நீர் கருத்திட்டத்தை செயற்படுத்த 2018 செப்டம்பர் 07 திகதிய பொதுச் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியிருந்த போதும், அதனூடாக பாரிய அளவில் | கடிதம் மூலம் அறிவூட்டி மேலும் கண்டறிந்து இக் கருத்திட்டத்தின் செயற்பாடுகளை இரத்துச் செய்ய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக. | ஏற்படும் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு உற்பத்தி நிலைய |

| | | |
|---|---|---|
| சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதனால் கருத்திட்ட செயற்பாடுகளை உடனடியாக நிருத்துமாறு சபையினால் அறிவித்திருந்த போதும் 2021 பெப்ரவரி அளவிலும் குறித்த உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | செயற்பாடுகளை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபை நிதியத்தை பயன்படுத்தி களவான சந்தை வளவை அபிவிருத்தி செய்யும் வேலையை நிறைவேற்ற களவான மேற்கு கமநல சங்கத்துடன் ரூபா 524,128 பெறுமதியான உடன்படிக்கையிற்கு 2020 ஒக்டோபர் 15 திகதி இணங்கியிருந்ததுடன், மதிப்பீட்டின் விடய இலக்கம் 02 மற்றும் 04 இன் கீழ் நிர்மாணித்திருந்த வேலை விடயங்கள் இயந்திர பாவணையுடன் மேற்கொண்டிருந்த போதும், அவற்றை ஊழிய பயன்பாட்டினால் மேற்கொள்ளும் விகிதங்களை பயன்படுத்துவதற்காக முறையே ரூபா 101,597 மற்றும் ரூபா 49,143 கூடுதலாக செலுத்தியிருந்தன. அவ்வாறே வேலைக்காக பயன்படுத்திய மண் மற்றும் ABC அளவுகள் கொடுப்பனவு செய்த அளவை விட குறைந்தமையால் அதற்காக முறையே ரூபா 50,420 மற்றும் 5,538 ஆக கூட்டுத் தொகை ரூபா 206,698 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன. | மண் வெட்டும் இடத்தில் வீடொன்று அமைந்துள்ளதால் தொழிலாளர்களை பயன்படுத்த நேர்ந்தாகவும் இயந்திரம் மண் நிரப்ப மாத்திரமே பயன்படுத்தியதாகவும் அதன் காரணமாக EW 1 – 001 விலைகளை பயன்படுத்த நேர்ந்ததாகவும் மற்றும் சிறிய அளவில் ABC பயன்படுத்தும் போது வேலைகளிற்காக MI-013M விலைகள் பயன்படுத்துவதாகவும் ABC போக்குவரத்து கி.மீ 53 தூரத்தில் இலிருந்து மேற்கொள்வதால் கி.மீ 30 இற்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்வதாக. | மதிப்பீடு தயாரிக்கும் போது மிகவும் பொருத்தமான சிக்கனமான விகிதங்களை பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | போலியான விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்தல். | | |
| (i) | மாகாண சபை நிதியத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தபஸ்சர கந்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் போது வெட்டப்பட்ட மண்ணின் அளவின் பிரகாரம் நடைமுறை மற்றும் அரசிற்கு சிக்கனமான விகிதமான இயந்திர பாவனையினால் மண் வெட்டும் விகிதத்திற்கு பதிலாக ஊழிய பயன்பாட்டினால் மண் வெட்டுவதற்கான விகிதத்தின் மீது கொடுப்பனவு செய்த காரணத்தால் ரூபா 429,468 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மண் வெட்டும் இடத்தில் வீடொன்று அமைந்துள்ளதால் தொழிலாளர்களை பயன்படுத்த ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டதால் EW 1 – 001 விலைகளை பயன்படுத்த நேர்ந்ததாக. | மதிப்பீடு தயாரிக்கும் போது மிகவும் பொருத்தமான சிக்கனமான விகிதங்களை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபை நிதியத்தினால் நிறைவு செய்த 03 வேலைகளிற்காக பாதை நிர்மாண கட்டண பதிவேடு (2020) பிரகாரம் ABC பரப்பும் போது பயன்படுத்த வேண்டிய விகிதம் M1-012A ஆன போதும், அதற்காக M1-013 (அகலம் 1.2 மீட்டரிலும் குறைந்த இடங்களிற்கு ABC இட பயன்படுத்தப்படும்) விகிதங்களை பயன்படுத்திய காரணத்தால் கூட்டுத் தொகை ரூபா 144,356 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | M1-012 A விலைகள் பயன்படுத்தப்படுவது பாரிய நிர்மாணங்களிற்காக எனவும் இவ் வேலையிற்கு ABC பரப்புவது 1.20 மீட்டரிலும் குறைந்த லேயர்ஸ் ஆக ABC பயன்படுத்தியுள்ளதுடன் மோடார் கிரேடர் பயன்படுத்தவில்லை எனவும் அதனால் M1-013 விலைகளின் கீழ் ABC பரப்புதல் மேற்கொள்வதாக. | மதிப்பீடு தயாரிக்கும் போது மிகவும் பொருத்தமான சிக்கனமான விகிதங்களை பயன்படுத்த வேண்டும். |
| (iii) | மாகாண சபை நிதியம் மற்றும் சபை நிதியத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 07 பாதைகளின் கொன்கிரீட் இடுவதற்காக வடிவை அமைக்க மிகவும் பொருத்தமான, நடைமுறை சாத்தியமான மற்றும் அரசிற்கு சிக்கனமான விகிதங்களாக ST1 – 057 இற்கு பதிலாக ST1 – 064 மற்றும் ST1 – 065 பயன்படுத்திதன் காரணமாக ரூபா 105,635 ஆன தொகை கூடுதலா செலுத்தப்பட்டிருந்தது. | பாதை கொன்கிரீட் இடும் போது மிகவும் நள்ள பலகைகளை பயன்படுத்த வேண்டியதால் அதற்காக ST1 – 064/065 விலை அளவுகள் பயன்படுத்த வேண்டியதாகவும் கொன்கிரீடினுள் நீர் கசிவதனால் காலம் செல்கையில் கொன்கிரீட்டின் பலம் குறைதல், உடைந்து போதல் போன்றன இடம் பெற முடியுமாகையால் கொன்கிரீட் இரு புறமும் உருதியானதாக காணப்பட வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கும் போது மிகவும் பொருத்தமான சிக்கனமான விகிதங்களை பயன்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 1440 மெட்டிக் டொன் அளவான திண்ம கழிவுப் பொற்களை வெளியிட ரூபா 358,000 ஆன கிரயம் மற்றும் 07 ஆளணி ஊழியர்களும் 03 வாகனங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அக் கழிவுகளை வெளியிடல் ஒழுங்கான மற்றும் சுற்றாடல் நேய முறையிற்கு மாற்றமாக நிலத்தில் குழிகள் வெட்டி அதனுள் கழிவுகளையிட்டு குழிகள் மூடப்பட்டிருந்தன. | முறையாக கழிவுளை வெளியிட குப்பை கொட்டில் ஒன்றை நிர்மாணிக்க பிரச்சினையற்ற காணியொன்று இல்லாததுடன் காணியொன்றை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | முறையான கழிவுப் பொருள் முகாமை திட்டமொன்றை தயாரித்து பின்பற்ற வேண்டும். |